# செப்டம்பர் 17 ஒருவரி நடப்பு நிகழ்வுகள்

- இந்திய – பாகிஸ்தான் சர்வேதச எல்லையில் அதிநவீன வேலி (smart fencing) அமைப்பதற்கான திட்டங்களை மத்திய உள்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஜம்முவில் தொடங்கிவைத்தார்.
- உலகின் முதல் ஹைட்ரஜன் மூலம் இயங்கும் ரயில், சுற்றுச்சூழல் நட்பு தொழில்நுட்பத்துடன் ஜெர்மனி அறிமுகப்படுத்தியது.
- புதுடில்லியில் முதல் 'இந்திய சுற்றுலா மார்ட்'ஐ (ITM 2018), மத்திய ரயில்வே மற்றும் நிலக்கரி அமைச்சர் பியுஷ் கோயல் துவக்கி வைத்தார்.
- பிரசாந்த் குமார் - **எஸ்.பி.ஐ. தலைமை நிதி அதிகாரி**
- மத்திய பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர்ப்பு, ஓய்வூதியத் துறைகளின் இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங் அகில இந்திய ஓய்வூதிய குறைதீர்ப்பு மன்ற நிகழ்ச்சியை தில்லியில் தொடங்கி வைக்கிறார்.
- பாங்க் ஆப் பரோடா, தேனா வங்கி, விஜயா வங்கி மூன்றும் ஒன்றாக இணைக்க மத்திய அரசு முடிவு
- நேபாளம் மற்றும் சீனா இடையே சீனாவின் சின்சுவான் மாகாணத்தில் "சாகர்மாதா பிரண்ட்ஷிப் -2" தொடங்கியது.
- கேரளா சுற்றுலா - **இரண்டு பசிபிக் ஆசிய பயண சங்க தங்க விருதுகள்** ['யல்லா கேரளா' வளைகுடா நாடுகளில் பயண விளம்பர அச்சு ஊடக பிரச்சாரம் மற்றும் இரண்டாவது கொச்சி-முசிரிஸ் பையென்னல் - புதுமையான சுவரொட்டிக்கு]
- தேசிய சுகாதார நிறுவனம் (NHA) இணையதளம் மற்றும் ஹெல்ப்லைன் எண்ணை அறிமுகப்படுத்தியது.
- மெட்வெட் சர்வதேச மல்யுத்த போட்டியில் 62 கிலோ பிரிவில் சாக்ஷி மாலிக் வெள்ளிப் பதக்கம் வென்றார்.பூஜா தண்டா 57 கிலோ பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- உலக சாம்பியன் கெவின் மேயர் டெகாத்லானில் 9,126 புள்ளிகள் பெற்று புதிய உலக சாதனையை படைத்தார்.


Join Us on FB:

For English – Examsdaily    For Tamil – Examsdaily Tamil

For WhatsAPP Group - Click Here